# அறிவுரைகள்

ஒன்லைன் திட்டத்தின் கீழ் மட்டுமே பொலிஸ் தடையகற்றல் பத்திரத்திற்கு விண்ணப்பம் செய்ய வேண்டும் என்பதுடன் அதற்கு ஒன்லைன் திட்டத்தினூடாக ( Online ) தடையகற்றல் விண்ணப்பப் பத்திரம் விண்ணப்பிக்கக் கூடிய வசதிகள் உள்ளதுடன் அதற்கான தொகையினை Credit Card மூலமாகவோ Debit Card மூலமாக செலுத்த முடியும். ( www.police.gov.lk )

இந்த தடையகற்றல் விண்ணப்பப் பத்திரத்திலுள்ள கேள்விகள் சம்பந்தமாக தகவல்களை உட்புகுத்தும் போது கீழ் வரும் விடயங்களை கவனத்தில் கொள்ளவும். விண்ணப்பப் படிவம் ஆங்கிலப் பெரிய எழுத்துக்களில் ( மின்னஞ்சல் முகவரியைத் தவிர ) நிரப்பவும். ( உ+ம் BANDARA )

பொலிஸ் விண்ணப்பப் பத்திரம் விண்ணப்பிக்கும் போது விண்ணப்பப் படிவத்தில் முதலாவது கேள்வி Application Type எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

- அதில் விண்ணப்தாரிக்கு " News " மற்றும் " Renewal " என முறைமை இரண்டு வழங்கப்பட்டுள்ளது.
- முதல் முறையாக இலங்கை பொலிஸ் தடையகற்றல் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் போது முன்னர் விண்ணப்பித்த சரியான தகவல்களை உட்புகுத்தாத காரணத்தினால் பிழையான பத்திரம் வினியொகிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் ( உ+ம் - தேசிய அடையாள அட்டை இலக்கத்திற்குப் பதிலாக கடவுச்சீட்டு இலக்கம் உட்புகுத்திட, தேசிய அடையாள அட்டையில் உள்ளவாறு பெயரிற்குப் பதிலாக கடவுச்சீட்டில் உள்ள பெயரினை உட்புகுத்திட, தற்போதைய முகவரியினை மாற்றம் செய்திட, பத்திரம் வினியோகிக்கப்பட்டுள்ள காலகட்டத்தை நீடித்துக்கொள்ள அல்லது ஏதேனும் காலகட்டத்தை மாற்றம் செய்திட, புதிய தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது புதிய கடவுச்சீட்டு இலக்கம் உட்புகுத்திட, தேசிய அடையாள அட்டையில் அல்லது கடவுச்சீட்டில் பெயர், முகவரி அல்லது வேறேதும் தகவல்கள் புதுப்பிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் அத் தகவல்களை உட்புகுத்திட ) " News " தீர்வின் மூலமாக விண்ணப்பித்தல் வேண்டும்.
- " Renewal " எனும் முறைமையினைத் தேர்ந்தெடுக்கும் போது ஒரு வருடத்திற்குள் இறுதியாக பெற்றுக்கொண்ட பத்திரத்தின் நிழற் பிரதி ஒன்றினை மட்டும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் அந்த விண்ணப்பத்தில் தூதரக முகவரியினைத் தவிர வேறேந்த மாற்றமும் செய்யமுடியாது.

தேசிய அடையாள அட்டையில் அல்லது கடவுச்சீட்டில் உள்ளவாறு பெயர்கள் அதன்படியே குறிப்பிடப்படல் வேண்டும். ( ஆங்கில எழுத்துக்கள் அதன்படியே சரியாக உட்புகுத்திட பொறுப்பாதல் வேண்டும் )

Which name Should be printed in certificate எனக் குறிப்பிட்டுள்ள கேள்விக்கு " NIC " மற்றும் " Passport " ,என இரண்டு தீர்வுகள் கொடுக்கப்பட்டுள்ளது.

- " NIC " என்ற தீர்வினை தேர்ந்தெடுக்கும் போது சான்றுப்பத்திரத்தில் அச்சாவது தேசிய அடையாள அட்டையின் இலக்கமும் அதிலுள்ளவாறு பெயருமாகும்.
- " Passport " , என்ற தீர்வினை தேர்ந்தெடுக்கும் போது சான்றுப்பத்திரத்தில் அச்சாவது கடவுச்சீட்டின் இங்கு விண்ணப்பதாரியின் வெளிநாட்டுக் கடவுச்சீட்டின் பெயரிலும் மற்றும் தேசிய அடையாள அட்டையிலுள்ள பெயரிலும் மாற்றமிருப்பின் மாத்திரம் அதற்கு சட்டத்தரணியின் அல்லது சமாதான நீதவானினால் உறுதிப்படுத்தப்பட்ட சத்தியக்கடதாசியின் மூலப்பிரதி இணைக்கப்படல் வேண்டும். ( பெயர்களில் மாற்றம்மில்லாவிட்டால் சத்தியக்கடதாசிக்குப் பதிலாக வெளிநாட்டுக் கடவுச்சீட்டினை இணைத்தல் போதுமானதாகும் )

" Country " என்பதற்கு தடையகற்றல் பத்திரம் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் தூதரக அலுவலகத்தின் நாடு குறிப்பிடப்படல் வேண்டும்.

வெளிநாடுகளின் தூதரகத்தின் முகவரிக்கு, குடிவரவு குடியகல்வுக் கட்டுப்பாட்டாளரிற்கு மாத்திரம் தடையகற்றல் பத்திரம் வினியோகிக்கப்படும் என்பதுடன் தனியார் நிறுவனங்களிற்கு தடையகற்றல் பத்திரம் வினியோகிக்கப்படமாட்டாது என்பதுடன் தேசிய நிறுவனங்களிற்கு பிரதேச பொலிஸ் நிலையங்களினூடாக தடையகற்றல் பத்திரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

" Places of residence for the period certificate is required " எனக்குறிப்பிடப்பட்டுள்ள கேள்விக்கு தடையகற்றல் பத்திரம் பெற்றுக்கொள்ளத் தேவையான இலங்கையில் வசித்த காலகட்டம் மாத்திரம் குறிப்பிடப்படுதல் வேண்டும். ( வெளிநாட்டிலிருந்த காலம் தவிர்த்து )

- வசித்த காலகட்டம் சரியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும். ( திகதி / மாதம் / வருடம் )
- வசித்த முகவரிகள் மற்றும் பொலிஸ் பிரிவுகள் சரியாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.
- தடையகற்றல் பத்திரம் பெற்றுக்கொள்ளத் தேவையான காலகட்டம் சரியாக கட்டத்திற்குள் உட்செலுத்தப்பட்டுள்ளதாவென உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

விண்ணப்பப் படிவம் விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரியினால் கீழ் வரும் ஆவணங்களின் PDF பிரதிகள் இணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

- தேசிய அடையாள அட்டை ( முன் / பின் பக்கங்கள் )
- செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ( உண்மைத் தரவுகள் மற்றும் அனைத்து நாடுகளினதும் பக்கங்கள் )
- சத்தியக் கடதாசி ( பெயரகளிற்கிடையில் வித்தியாசமிருக்கும் சமயங்களில் )

விசாரணை நடவடிக்கைளிற்காக விண்ணப்பதாரியடன் தொடர்பு கொள்ள வேண்டியேற்படின் அதற்கு உள்நாட்டிற்குள் பாவிக்கும் தொலைபேசி இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும் என்பதுடன், வெளிநாட்டவர் மற்றும் வெளிநாட்டில் இருக்கும் இலங்கையர்கள் WhatsApp உள்ள தொலைபேசி இலக்கம் குறிப்பிடப்படல் வேண்டும்.

**<u>கவனத்தில் கொள்ள வேண்டியது</u>**

I. விண்ணப்பப் படிவம் விசாரணையின்போது பிரதேச பொலிஸ் அறிக்கை பரிந்துரை செய்யப்படாத மற்றும் தேசிய அடையாள அட்டை சம்பந்தமான குழறுபடிகள் ஏற்படும்போது மின்னஞ்சல் மூலமாக விண்ணப்பதாரிக்கு தெரியப்படுத்தப்படுவதால் சரியான மின்னஞ்சல் முவரியினைக் குறிப்பிடப்படல் வேண்டும்.

II. பொலிஸ் தடையகற்றல் பத்திர அறிக்கை இலங்கைப் பொலிஸினால் உங்களைப் பற்றி மேற்கொள்ளப்படுகின்ற விசாரணைகளின் மூலமாக பெற்றுக்கொள்ளப்படுகின்ற பின்புல அறிக்கையின் அடிப்படையில் பொலிஸ் தலைமையகத்தின் நிர்வாகப்பணிப்பாளரினால் வினியோகிக்கப்படுவதுடன் விண்ணப்பதாரியினால் குறிப்பிடப்பட்டுள்ள

முகவரிக்கு பதிவுத்தபாலில் மட்டுமே அனுப்பி வைக்கப்படும் என்பதை தயவுடன் கவனித்துக் கொள்ளுங்கள்.

III. விண்ணப்பதாரியின் தனிப்பட்ட தகவல்களை உட்புகுத்தும் போது " Present Address in Sri Lanka " எனக்குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் தற்போதைய முகவரியினைக் குறிப்பிடும் போது முகவரியின் இறுதியில் " Sri Lanka " எனக் கட்டாயம் குறிப்பிடல் வேண்டும்.

IV. தேசிய அடையாள அட்டையில் " வேறு பெயர்களின் " கீழ் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் சான்றுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட வேண்டியது எந்தப் பெயர் ? அப்பெயர் " Applicants Name in full as in the NIC " எனக் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிடல் வேண்டும்.

V. பொலிஸ், முப்படையினர், சிவில் பாதுகாப்புப் படையினர், கரையோர பாதுகாப்புப் படையினர் ஆகிய படையணிகளில் சேவையிலிருப்பவர்களிற்கு பொலிஸ் தடையகற்றல் பத்திரம் வினியோகிக்கப்படுவது அதிகாரமழிக்கப்பட்டவர்களின் எழுத்து மூலமான அனுமதியின் பிரகாரம் மட்டுமே.

VI. பாரமழிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் சம்பந்தமாக பின்புலம் ஆராயப்பட வேண்டியவிடத்து கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு விசாரிக்க முடியும்.

VII. விண்ணப்பப் படிவங்களில் மாற்றம் செய்யப்படவேண்டியேற்படின் அதற்கு விண்ணப்பப் படிவம் சமர்ப்பித்த இரு தினங்களிற்குள் கோரிக்கைவிடுதல் வேண்டும் என்பதுடன் அதற்றகுப் பின்னர் விடுக்கப்படும் கோரிக்கைகள் நிராகரிக்கப்படும்.

VIII. விண்ணப்பப் படிவங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் பிழையான தகவல்கள் மற்றும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அக்குறைபாடுகளை திருத்தம் செய்யுமாறு தொலைபேசி, மின்னஞ்சல் அல்லது வட்ஸ்அப் ( E-MAIL / WhatsApp ) ஊடாக அறிவித்துள்ளபோது அது 03 மாத காலத்திற்குள் பூரணப்படுத்தப்படாவிடின் அவ்விண்ணப்பப் படிவம் இணையத்திலிருந்து அகற்றப்படும்.

IX. விண்ணப்பப் படிவத்தில் பொலிஸ் பிரிவுகளில் வசித்த காலங்கள் சரியாகக் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்களில் மற்றும் பொலிஸ் விசாரணையின் மூலம் வசித்த காலங்கள் குறைந்தளவில் குறிப்பிட்டுள்ள சந்தர்ப்பங்களில் மின்னஞ்சல் அல்லது வட்ஸ்அப் ( E-MAIL / WhatsApp ) ஊடாக அது சம்பந்தமாக உங்களிற்கு தெரியப்படுத்தப்படும் என்பதுடன் அப்படியான சந்தர்ப்பங்களில் அதற்கான சரியான தகவல்களை

வழங்காவிடின் பொலிஸ் நிலையங்களால் சிபாரிசு செய்யப்படும் காலகட்டத்திற்கு மாத்திரமே தடையகற்றல்ப் பத்திரம் வினியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மிகவும் முக்கியமானது** ;

- தடையகற்றல்ப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்க வழங்கப்பட்டுள்ள காலமானது 20 நிமிடங்கள் மட்டுமேயானபடியால் 20 நிமிடங்களிற்குள் விண்ணப்படிவத்தினை பூரணப்படுத்தி கட்டணம் செலுத்தி நிறைவு செய்திட வேண்டும்.
- கடவுச்சீட்டில் பெயர் மாறியிருப்பின் மாற்றம் செய்ய வேண்டிய பக்கத்தின் நிழற்பிரதி ஒன்றினைச் சமர்ப்பிக் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- தெளிவானதும் மற்றும் செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை மற்றும் கடவுச்சீட்டினை அனுப்பாவிடில் மீண்டும் கட்டணம் திரும்பச் செலுத்தாது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
- மேற்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சரியாக குறிப்பிடுவதன் மூலம் தடையகற்றல்ப் பத்திரம் வினியோகிக்கப்படும் காலம் 14 நாட்களிற்குள்ளாகும்.

**தொலைபேசி இலக்கம்** ; **0112439185, 0112421111**
**தொலைநகல்** ; **0112439187**
**வட்ஸ்அப்** ; **0718592990**
**மின்னஞ்சல்** ; **clearance@police.gov.lk**
**இணையத்தளம்** ; **www.police.gov.lk**